சாலை மறியல்: 20 பெண்கள் உள்பட 50 பேர் மீது வழக்கு

விழுப்புரம், செப். 29: விழுப்புரம் அருகே சாலை மறியலில் ஈடுபட்ட 20 பெண்கள் உள்பட 50 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

விழுப்புரம் வட்டம், ராமையன்பாளையம் பகுதியில் கடந்த சிலநாள்களுக்கு முன்னர் நிகழ்ந்த சாலை விபத்துகளில் மூதாட்டி உயிரிழந்தார். இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்நிலையில்,விக்கிரவாண்டி–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்று வரும் சாலை சீரமைப்புப் பணிகள் தான் இந்த விபத்துகளுக்கு காரணம் எனக் கூறி, கிராம மக்கள் மற்றும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ராமையன்பாளையம் அருகே திங்கள்கிழமை சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அந்தச் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வாகன ஓட்டிகள், பொது மக்கள் அவதிக்குள்ளாகினர். இதையடுத்து வளவனூர் போலீஸார் நிகழ்விடம் சென்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது கிராம மக்கள் சாலை சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து ராமையன்பாளையத்தில் சாலை மறியலில் ஈடுபட்ட 20 பெண்கள் உள்பட 50 பேர் மீது வளவனூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரிக்கின்றனர்.

பூட்டிய வீட்டில் தங்க நகைகள் திருட்டு

விழுப்புரம், செப். 29: விழுப்புரம் மாவட்டம், வானூர் அருகே பூட்டியிருந்த வீட்டின் கதவை உடைத்து தங்க நகைகள் திருடப்பட்டிருந்தது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வானூர் வட்டம், திருவக்கரை திரௌபதி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் வேல்முருகன், லாரி ஓட்டுநர். இவரது மனைவி சங்கீதா (39). வேல்முருகன் வேலைக்குச் சென்றுவிட்ட நிலையில், சங்கீதா செப். 27– ஆம் தேதி தனது வீட்டைப் பூட்டி விட்டு திருச்செந்தூர் சோயிலுக்குச் சென்றுள்ளார்.

தொடர்ந்து செவ்வாய்க்கிழமை சங்கீதா வீட்டுக்கு திரும்பி வந்து பார்த்தபோது, வீட்டின் முன்பக்கக் கதவு உடைக்கப்பட்டிருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தார். பின்னர், உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் வைக்கப்பட்டிருந்த 14 கிராம் தங்க நகைகள், வெள்ளிக் கொலுசு மற்றும் சமையல் எரிவாயு உருளை ஆகியவை திருடப்பட்டிருந்தது அவருக்கு தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் வானூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரிக்கின்றனர்.

கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு

பரிகம் கிராமத்தில் நடைபெற்று வரும் பாலப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா.

கள்ளக்குறிச்சி, செப். 29: கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஜெ.இ. பத்மஜா செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் ஆட்சியர் கூறியதாவது: கள்ளக்குறிச்சி ஒன்றியம், நல்லாத்தூர் கிராமத்தில் ஏரி தூர்வாரும் பணி ஆய்வு செய்யப்பட்டது. பின்னர், பரிகம் கிராமத்தில் மாநில சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் ரூ.7.56 கோடி மதிப்பீட்டில் கோமுகி அணை முதல் வடக்கனந்தல் வரை புதிதாக அமைக்கப்பட்டு வரும் இணைப்பு பாலம் மற்றும் சாலைப் பணிகளை பார்வையிட்டு, திட்ட மதிப்பீடு, பணி முடிவடையும் காலம் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்துக் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து அம்மாபேட்டை கிராமத்தில் கால்நடை மருந்தகத்தை பார்வையிட்டு, மருந்தகத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறியப்பட்டது. அங்கன்வாடி மையத்தை பார்வையிட்டு, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், மாத்தூர் கிராமத்தில் சீமைக் கருவேலமரங்கள் அகற்றும் பணியை பார்வையிட்டு, பணிகளை விரைவில் முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மாத்தூர் கிராமத்தில் 'வளர்ச்சியடைந்த பாரதம்–கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத இயக்கம்' திட்டத்தின் கீழ் ரூ.8.06 லட்சம் மதிப்பீட்டில் குளம் அமைக்கும் பணி மற்றும் ரூ.2.16 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மரக்கன்றுகள் நட்டு வைத்துப் பராமரிக்கப்படும் பணி, மாதவச்சேரி கிராமத்தில் ரூ.8.06 லட்சம் மதிப்பீட்டில் குளம் அமைப்பது ஆகிய பணிகள் ஆய்வு செய்யப்பட்டன.

இந்தப் பணிகளை விரைவில் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்குகொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டது என ஆட்சியர் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

2 கோயில்களில் உண்டியல்களை உடைத்து பணம் திருட்டு

திருட்டுச் சம்பவம் நிகழ்ந்த ஆஞ்சநேயர் கோயில்.

விழுப்புரம், செப். 29: விழுப்புரத்தில் உள்ள ஸ்ரீஆஞ்சநேயர் மற்றும் அங்காளம்மன் கோயில்களில் வைக்கப்பட்டிருந்த உண்டியல்களை உடைத்து பணத்தைத் திருடிய மர்ம நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

விழுப்புரம் நகரம், திரு.வி.க வீதியில் ஸ்ரீஆஞ்சநேயர் கோயில் உள்ளது. இக்கோயிலில் பத்மநாபன் என்பவர் அர்ச்சகராகப் பணி செய்து வருகிறார். இவர், திங்கள்கிழமை இரவு வழக்கம்போல் பூஜைகளை முடித்து, கோயிலை பூட்டி விட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார். தண்டபாணி என்பவர் கோயிலில் இரவுக் காவல் பணியிலிருந்துள்ளார்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை கோயிலின் பின் பக்கத்தில் கதவை உடைத்து உள்ளே சென்ற மர்ம நபர்கள், கோயில் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை பெயர்த்து வெளியே எடுத்துச்சென்று, அதிலிருந்த காணிக்கை பணத்தைத் திருடிச் சென்றுவிட்டனராம். இதுகுறித்த புகாரின் பேரில் விழுப்புரம் நகர காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து, கோவில் காவலாளி உள்ளிட்டோரை விசாரிக்கின்றனர்.

அங்காளம்மன் கோயிலில்... இதேபோல் விழுப்புரம், பாகர்ஷா வீதியில் உள்ள அங்காளம்மன் கோயிலில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை மர்ம நபர்கள் உடைத்து பணத்தைத் திருடிச் சென்றிருந்தது செவ்வாய்க்கிழமை தெரியவந்தது. இதுகுறித்து விழுப்புரம் மேற்குகாவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாளைய மின்தடை

விழுப்புரம் மாவட்ட புறநகர்ப் பகுதிகள்

நேரம்: காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.

பகுதிகள்: வேம்பி, வேலியந்தல், குண்டலப்புலியூர், பூத்தமேடு, தென்னமாதேவி, திருவண்ணாமலை பிரதான சாலை, சோழகனூர், கப்பம்பேட்டை, அய்யங்கோவில்பட்டு, முத்தாம்பாளையம், அய்யூர் அகரம், அயினம்பாளையம், கொட்டப்பாக்கத்துவெளி, சானந்தோப்பு, திருவாமாத்தூர், மேல்காரணை, கல்யாணம்பூண்டி, வெங்காயக்குப்பம், கொரசூர், சாலவனூர், பனமலைப்பேட்டை, வெள்ளையாம்பட்டு, சி.என்.பாளையம், புதுகருவாட்சி, பழையக் கருவாட்சி, சங்கீதமங்கலம், நங்காத்தூர்.

பகுதிகள்: மூங்கில்பட்டு, மாத்தூர், தென்னவராயன்பட்டு, முதலியார்குப்பம், பகண்டை கூட்டுச்சாலை, குமளம், நகரி.

கல்குவாரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்கள் சாலை மறியல்

செஞ்சி, செப். 29: விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே மீண்டும் செயல்பட்ட கல்குவாரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்கள் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

செஞ்சி அருகிலுள்ள போத்துவாய், பழவலம் ஊராட்சி மன்றங்கள் இடையே உள்ள எலகுண்டான் மலை கல்குவாரியை கோவையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று 2011 முதல் 2041–ஆம் ஆண்டு வரை உரிமம் எடுத்து, நடத்தத் தொடங்கினர். இதையடுத்து கடந்த மார்ச் மாதம் கிராம மக்கள் போராட்டம் நடத்தி, கல்குவாரி செயல்படுவதை தடுத்து நிறுத்தினர். இதையடுத்து நிறுவன உரிமையாளர் அருண்குமார் ஆக.20–இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் கல்குவாரி மீண்டும் செயல்பட வேண்டும் என வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரணை செய்த சென்னை உயர் நீதிமன்றம் கல்குவாரி மீண்டும் செயல்படவும், கல்குவாரி செயல்பட உரிய பாதுகாப்பு வழங்க விழுப்புரம் மாவட்ட காவல்துறைக்கும் உத்தரவிட்டது. இதையடுத்து தனியார் நிறுவனம் கடந்த சில நாள்களாக மலையில் உள்ள பாறைகளை வெடிவைத்து தகர்த்துள்ளனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரு கிராம மக்கள் இணைந்து கல்குவாரிக்கு செல்லும்சாலையில்அமர்ந்து செவ்வாய்க்கிழமை மறியலில் ஈடுபட்டு கல்குவாரியை கைவிடக்கோரி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இதுகுறித்து தகவலறிந்த செஞ்சி சட்டப் பேரவை உறுப்பினர் அ.கணேஷ்குமார், விழுப்புரம் டிஎஸ்பி சோமசுந்தரம், உள்ளிட்டோர் நிகழ்விடம் சென்று பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவன நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் **(படம்).**

அப்போது செஞ்சி எம்எல்ஏ அ.கணேஷ்குமார், நாங்கள் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளோம். அதற்கு 15 நாள்கள் அவகாசம் அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதை ஏற்று கல்குவாரியை தற்காலிகமாக செயல்படாமல் நிறுத்துவது என தனியார் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டதாம். இதையடுத்து மறியல் கைவிடப்பட்டது.

கனரா வங்கி Canara Bank
Syndicate
தலைமை அலுவலகம் : பெங்களூர்

ஊத்தங்கரை கிளை
நடேசா காம்ப்ளக்ஸ்,
சேலம் பைபாஸ் ரோடு,
ஊத்தங்கரை, தமிழ்நாடு-635207.

கேட்பு அறிவிப்பு [SECTION 13(2)]

கடனீட்டு சொத்துக்களைப் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்க சட்டம் 2002 பிரிவு 13(2)ன் கீழ், வங்கியில் பெற்ற **திரு. G.ஐயப்பன், (கடன்தாரர்/அடமானதாரர்)** த/பெ.கணபதி, 592, கல்லக்கோட்டை, குருமாபட்டி கிராமம், இளங்குன்னி அஞ்சல், திருவண்ணாமலை -606703 **திருமதி. I. செல்வி, (இணை கடன்தாரர்)** க/பெ. ஐயப்பன், 592, கல்லக்கோட்டை, குருமாபட்டி கிராமம், இளங்குன்னி அஞ்சல், திருவண்ணாமலை - 606703 **திரு. P. ராஜகுமரன், (ஜாமீன்தாரர்)** த/பெ. பாவடை, 114, பெருமாள் கோவில் தெரு, குருமாபட்டி கிராமம், இளங்குன்னி அஞ்சல், திருவண்ணாமலை - 606703 ஆகியோருக்கு **29-08-2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு பதிவுத் தபால் மூலம் தங்களுக்கு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட தபால் பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துள்ளது. எனவே தங்களுக்கு அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பினை பெற்றுக் கொள்ளாமல் நீங்கள் தவிர்த்துள்ளதாக நம்புவதற்கு இடமிருக்கிறது. அதனால் கேட்பு அறிவிப்பு இந்த தினசரி செய்தித்தாள் மூலமாக வெளியிடப்படுகிறது. நீங்கள் **HOUSING LOAN** பெற்றுக் கொண்டு அதற்கு அடமானமாக உங்கள் சொத்துரிமை ஆவணங்களை வங்கியில் ஒப்படைப்பு செய்து உள்ளீர்கள். கடன் தொகையை நீங்கள் திருப்பிச் செலுத்தாததால், மேலும் **கனரா வங்கி, ஊத்தங்கரை கிளையில்** கடன் நிலுவைத் தொகை **ரூ.11,56,100.29 (ரூபாய் பதினொரு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து நூறு மற்றும் இருபத்தொன்பது பைசா மட்டும்)** மற்றும் **30-08-2026** முதல் பின் தொடர்ந்த வட்டி மற்றும் இதர செலவுகள் நீங்கள் செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி கடன் தொகை அதன் பின் தொடர் வட்டி முதலியவைகளை திரும்ப செலுத்த, உத்திரவாதத்திற்காக நீங்கள் **கனரா வங்கி, ஊத்தங்கரை கிளையில்** அடமானமாக கீழ்க்கண்ட சொத்துக்களை பிணையமாகக் கொடுத்திருக்கிறீர்கள்.

சொத்துக்கள் விபரம்

இச்சொத்து **திரு. G. ஐயப்பன்** பெயரில் உள்ளது.

இச்சொத்தின் நிலமானது திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் துணை பதிவு மாவட்டம், செங்கம் தாலுக்கா, குருமாபட்டி கிராமம், நத்தம் சர்வே எண்.33/1, புதிய சர்வே எண்.100/19-ல் அமைந்துள்ளது. இதிலுள்ள அளவுகள் கிழமேல் வடக்கு பக்கம் **29அடி,** தெற்கு பக்கம் **31அடி,** தென்வடல் மேற்கு பக்கம் **39அடி,** கிழக்கு பக்கம் **40அடி. எல்லைகள் :** மாரியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள கிராமநத்தத்திற்கு **கிழக்கு,** தவமணியின் மனைக்கு **மேற்கு,** தெருவிற்கு **வடக்கு,** அம்மாசி கவுண்டரின் வீட்டிற்கு **தெற்கு.** மொத்தம் 1185 ச.அடி மனையில் தற்போது வீட்டு கட்டிடமும் உள்ளது.

எனவே கடன் பெற்றவராகிய / உத்திரவாதமளித்தவராகிய நீங்கள் இந்தக் கடன் நிலுவைத் தொகை, தொடர்ந்த வட்டி, இதர செலவுத் தொகைகள் மற்றும் இந்த கேட்பு அறிவிப்புக்கான செலவு போன்றவற்றை மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் சொத்து ஆதாரங்களின் பேரில் வங்கி பெற்றுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடனீட்டுச் சொத்துக்களை பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன் அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(4)–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள எல்லா அல்லது ஏதேனும் உரிமையை பிரயோகிக்க வங்கிக்கு உரிமை உண்டு. எனவே இந்த நோட்டீஸ் வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த தவறினால், பிணையத்தை அமல்படுத்த வேண்டியிருக்கும் என பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 3(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது. மேற்கண்ட சட்டப்பிரிவு 13(13) ன் கீழ் நீங்கள் மேற்படி சொத்தை வங்கியின் ஒப்புதலின்றி எந்தவித சொத்துரிமை மாற்றமும் செய்யக் கூடாது.

தேதி : 29-08-2026
இடம் : ஊத்தங்கரை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் – திருவள்ளூர் மாவட்டம்

ந.க.எண்.3250/2023 – ஆ2 (மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு) நாள் : 29.09.2026

1. முழுமையான விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதள முகவரியை பார்வையிடவும்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களால் (NTECL) CSR நிதி பொறுப்பு உட்கட்டமைப்பு திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் வல்லூர் ஊராட்சியில் Construction of RCC Storm Water Drainage at NTECL Township Rear Side Channel For Free and Quick Disposal of Rainwater to Athipattu Thangal பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோர முலம் வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் கட்டணம் ஏதுமின்றி **01.10.2026** முதல் **15.10.2026** வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கிய தேதிகள் மற்றும் விவரங்கள்:

கடைசி நாள் மற்றும் நேரம்	**15.10.2026** மாலை **3.00** மணி வரை
மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	**15.10.2026** மாலை **3.00** மணி வரை
மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	**15.10.2026** மாலை **4.00** மணி முதல்

செ.ம.தொ.இ / 2982 /ஒப்பந்தப்புள்ளி/2026

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

IndusInd Bank
இன்டஸ் இண்ட் பேங்க் லிட்.,
FRR குரூப் இண்டஸ்இண்ட் வங்கி, எண்.25, ஸ்டீபிள் ரீச், A பிளாக், 3 வது மாடி, கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை-600086.

பிற்சேர்க்கை IV-A [பார்க்க ஷரத்துகள் விதி 8(6)] அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையா சொத்துகளின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு-2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகளின் கீழானது.

இதன் மூலம் பரவலாக பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) அவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் கடன் பெற்றுக் கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம்/ ஈடு வைக்கப்பட்டுள்ள இதன் கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமானச் சொத்துகள் அதிகாரபூர்வ அலுவலர், M/s இண்டஸ் இண்ட் பேங்க் லிட்., அவர்களால் **16.08.2024** அன்று வர்த்தக சொத்துக்காக நேரடி சுவாதீனம் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அந்தச் சொத்துகள், கடன்தாரர் **M/s லட்சுமி U** மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோரிடமிருந்து இன்டஸ்இண்ட் பேங்க் லிட்., நிறுவனத்துக்கு வரவேண்டிய 31.08.2026 அன்றுள்ளபடி கடன் பாக்கி **ரூ.1,25,29,456.98/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சத்து இருபத்தொன்பது ஆயிரத்து நானூற்று ஐம்பத்தாறு மற்றும் தொண்ணூற்றெட்டு பைசா மட்டும்)** மற்றும் ஒப்பந்த வீதத்தில் வட்டி, கட்டணங்கள், செலவுகள் ஆகியன சேர்த்து வசூலிப்பதற்காக "உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது என்னவோ அது " எனும் அடிப்படையில் **15.10.2026** அன்று விற்கப்படும்.

கடன்தாரர் பெயர்	M/s லட்சுமி

திருக்கனூர் சார்பதிவு அலுவலகத்துக்கு உட்பட்ட 12.03.2015 நாளிட்ட ஆவண எண் 1494/2015 -இன்படி திருமதி லட்சுமி, க/பெ. திரு. உதய குமார் அவர்களின் சொத்து.
இன்றியமையாப் பகுதிகள் மற்றும் பாகங்கள் அனைத்துடனும் கூடிய ப்ளாட் எண் 02 இல் உள்ள நிலம் மற்றும் கட்டடம் பரப்பளவு: 700 சதுர அடி அமைப்பெற்ற கடாஸ்டர் எண்: 339/1/2, 339/2/2, 338/2/1, 338/2/2, 341/1, 341/2 RS எண் 113/3B/4 தற்போதைய RS எண் 113/3B/4A அமைவிடம்: திருவாண்டவர் கோயில் வருவாய் கிராமம், மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து, பாண்டிச்சேரி மாவட்டம் எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** பாண்டிச்சேரி-விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை **தெற்கு:** இந்திராணி அம்மாள் அவர்களின் சொத்து **கிழக்கு:** ஆறுமுகம் உடையார் அவர்களின் சொத்து **மேற்கு:** சதாசிவம் அவர்களின் சொத்து. இது பாண்டிச்சேரி பதிவு மாவட்டம் மற்றும் திருக்கனூர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

குறைந்தபட்சக் கேட்பு விலை:	**ரூ.49,50,000/- (ரூபாய் நாற்பத்து ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)**
டேவணித் தொகை (EMD) தொகை (குறைந்தபட்சக் கேட்பு விலையில் 10%)	**ரூ.4,95,000/- (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் மட்டும்)**
தெரிந்த வில்லங்கம், எதுவும் இருப்பின்	**வங்கியின் அறிவுக்கு எட்டியவரை, - இல்லை.**
சொத்து மீது முன்வைக்கப்படும் எந்தவொரு உரிமைகோரல்கள், ஏதேனும் இருந்தால் மற்றும் ஈடுபெற்றுக் கடன் கொடுத்த வங்கிக்கு தெரிந்த பிற நிலுவைகள் மதிப்புகள்:	**வங்கியின் உச்ச பட்ச அறிவுக்கு எட்டியவரை எதுவும் அறியப்படவில்லை .**
விலைப்புள்ளி /ஏலப்புள்ளி சமர்ப்பிக்க இறுதி நாள்	**14/10/2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை**

தொடர்பு நபர் & தொலைபேசி எண் : திருமதி. A கிருஷ்ணகுமாரி (அதிகாரப்பூர்வ அலுவலர்) **அலைபேசி எண்: 9342332287, மின்னஞ்சல் முகவரி: krishnakumari.A@indusind.com, திரு. கமல் மிஸ்ரா அலைபேசி எண்: 9819820760**

சொத்து ஆய்வு	**08/10/2026 அன்று மாலை 04.00 மணி வரை**

விலைப்புள்ளி திறக்கப்படும் நேரம் மற்றும் இடம் : மின்-ஏலம் /விலைகோரல் (https://www.bankeauctions.com) என்ற இணையத்தளம் மூலம் 15.10.2026 அன்று காலை 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை நடைபெறும்

ஏல அதிகரிப்பு	**ரூ.50,000/-**

விற்பனைக்கான விரிவான விற்பனை விதிமுறை & நிபந்தனைகள் அறிய, மின் ஏலம் /தொடர்புடைய சொத்து விற்பனை மற்றும் மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விலைப்புள்ளி சமர்ப்பித்தலுக்கு முன் அறியவேண்டிய விவரங்களுக்கு ஈடுபெற்றுக் கடன்வழங்கிய வங்கியின் இணையத்தளம் பார்க்கவும் அஃதாவது- **https://www.indusind.com**. மேலும் விலைப் புள்ளிதாரர்கள் **https://www.bankeauctions.com** என்ற இணையத்தளத்தையும் பார்வையிடலாம் அல்லது சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளுங்கள் M/s. C 1 இந்தியா பிரைவேட் லிமிடெட் , ஏலதாரர் உதவி எண்கள் 0124-4302020 / 21 /22, +91 7291981124 /1125 /1126; மின்னஞ்சல்:**support@bankeauctions.com** & திரு.பிரபாகரன், தொடர்பு எண் +91 74182 81709.

சர்ஃபாசி சட்டம் 2002-இன் கீழான சர்ஃபாசி விதிகள்-விதி 8, உபவிதி 6-க்கு இணங்க உங்கள் அனைவருக்கும் இது 15 நாள் அறிவிப்பாகவும் இது வழங்கப்படுகிறது.

ஒம்/-
அதிகாரபூர்வ அலுவலர்
இன்டஸ் இண்ட் பேங்க் லிட்.,

நாள்:29.09.2026
இடம்:சென்னை

HINDUJA HOUSING FINANCE
இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
தலைமை அலுவலகம் : 167-169, 2வது தளம், அண்ணா சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
கிளை அலுவலகம் : எண்.10, முதல் கிழக்கு பிரதான சாலை, காந்தி நகர், காட்பாடி, வேலூர் – 632 006 .

மின் ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு (பிற்சேர்க்கை – IV A) [விதி 8(6)]

இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHF) நிறுவனத்தின் தலைமை அலுவலகம் எண்.167-169, 2வது மாடி, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015 மற்றும் கிளை அலுவலகம் எண்.10, முதல் தளம் கிழக்கு பிரதான சாலை, காந்தி நகர், காட்பாடி, வேலூர் – 632 006. ஆகிய முகவரிகளில் செயல்பட்டு வரும் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHF) நிறுவனத்தில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் விற்பனை. நிதிச் சொத்துக்களைப் பத்திரப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம், 2002 அமலாக்கத்தின் கீழ் (இனி 'சட்டம்'). அதே சமயம், HHFன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ("AO") பின்வரும் கடன் கணக்குகள்/எதிர்பார்ப்பு எண்களில் சட்டத்தின் U/S 13(2) வெளியிடப்பட்ட அறிவிப்புக்கு இணங்க பின்வரும் சொத்துக்களை உடைமையாக எடுத்துக்கொண்டார். நிலுவைத் தொகையை அடைவதற்கு, **"எங்கே உள்ளதோ போல் மற்றும் எதுவாக இருக்கிறதோ, அப்படியே"** மற்றும் **"எந்தவித பின்னர் கோரிக்கையும் இல்லாமல்"** விற்கும் உரிமையுடன். www.bankeauctions.com. என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மின்-ஏல தளம் மூலம் கீழே கையொப்பமிடப்பட்டவர்களால் விற்பனை செய்யப்படும்.

மின் ஏல தேதி மற்றும் நேரம்	முன்வைப்பு தொகை செலுத்த கடைசி தேதி	சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம்	ஏல உயர்வு தொகை
11.11.2026 காலை 11.00 முதல் மதியம் 1.00 மணி வரை	10.11.2026 மாலை 5.00 மணி வரை	17.10.2026 காலை 11.00 முதல் மாலை 4.00 மணி வரை	ரூ. 10,000/-

வ. எண்.	கடன்தாரர்(கள்) / இணை கடன்தாரர்(கள்)	கடன் கணக்கு எண் : TN/TVM/TRVM/A000000106	கடன்/செலுத்த வேண்டிய மொத்த தொகை	குறைந்தபட்ச விலை	கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை	அடையாளபூர்வ சுவாதீன தேதி	முன்வைப்பு தொகை (EMD)
1.	கடன்தாரர் : திரு. K. கங்காதரன் இணைக் கடன்தாரர் திருமதி G. அம்பிகா	பணம் செலுத்தும் கணக்கு எண் : HHFLTDTNTVMTRVMA106	21.09.2026 தேதியின்படி ரூ.8,77,666/-	ரூ.13,35,000/-	09.05.2026 ரூ.8,80,517/- அன்றுள்ளபடி 06.05.2026	22.08.2026 ரூ.8,80,517/- அன்றுள்ளபடி 06.05.2026	ரூ.3,33,750/-

திரு. K. கங்காதரன் வசிப்பது : எண். 278, T. வேலூர் மெயின் ரோடு, SE ஆண்டப்பட்டு கிராமம், தண்டராம்பட்டு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் – 606 708.
திருமதி. G. **அம்பிகா வசிப்பது :** எண்.32, T.வேலூர் மெயின் ரோடு, SE ஆண்டப்பட்டு கிராமம், தண்டராம்பட்டு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் – 606 708.

அடமானச் சொத்து/அசையா சொத்துக்களின் விபரங்கள் : திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பதிவு மாவட்டம், தானிப்பாடி சார்பதிவு அலுவலகம் மற்றும் தண்டராம்பட்டு வட்டம், SE ஆண்டப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள S.No.4/9Cல் 0.10 செண்ட் பரப்பளவில், புதிய S.No.4/9C1Bல், விண்ணப்பதாரர்களுக்குரிய 872 சதுர அடி (0.02 செண்ட்) பரப்பளவுள்ள குடியிருப்பு மனை. **இதன் நான்கு எல்லைகள் :** வடக்கு: தெரு, தெற்கு: சுந்தரமூர்த்தி மனை, கிழக்கு : T. வேலூர் மெயின் ரோடு, மேற்கு : ஹரிகிருஷ்ணன் மனை. இதன் அளவு மொத்தம் 872 சதுர அடி (0.02 செண்ட்). மேற்கண்ட எல்லைகளுக்குள் S.No.4/9C, புதிய உட்பிரிவு S.No.4/9C1Bல் மொத்தம் 872 சதுர அடி பரப்பளவுள்ள நிலமும், அதனுடன் இணைந்துள்ள அனைத்து வழிப்பாதை உரிமைகளும் அடங்கும்.

பணம் செலுத்தும் முறை :- அனைத்து தொகைகளும், குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு எண்களில் RTGS/NEFT மூலம் செலுத்த வேண்டும். (a) **கணக்கின் பெயர்: இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்,** (b) வங்கியின் பெயர் : **HDFC,** (c) **IFSC குறியீடு : HDFC0004989,** (d) **கிளை : காஞ்சமார்க், மும்பை.**

மின்-ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கான விவரங்களுக்கு https://www.bankeauctions.comல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும். மேலும் விவரங்களுக்கு சேவை வழங்குநரை தொடர்பு கொள்ளவும்: M/s C1 India Pvt Ltd, தொடர்பு எண்: 7291981124, 25, 26 – மின்னஞ்சல்: tn@c1india.com.

தேதி : 30.09.2026
இடம் : வேலூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
M/s. இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

தொடர்பு எண்கள் :
ZRM : திரு. ரகு : 86670 39272, RLM : திரு. செந்தில் ராஜன் : 99440 28878, RRM : திரு. S தினேஷ் பாபு : 95000 96714, ADM : திரு. தினேஷ் மூர்த்தி : 93442 71472
auction@hindujahousingfinance.com

மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: மஹிந்தரா டவர்ஸ், P K குர்னி சவ்க், வெர்லி, மும்பை-400 018, மஹாராஷ்ட்ரா, இந்தியா. Tel:+91 22 66523500
Email id: customercare.mrhfl@mahfin.com, Website – www.mahindrahomefinance.com
பிராந்திய அலுவலகம்: ஈஸ்ட்- வெஸ்ட் சென்டர், முதல் தளம், எண்.128 (பழைய எண்.35) நெல்சன் மாணிக்கம் ரோடு, அமிஞ்சிக்கரை, சென்னை-600 029

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

See rule 8(1) of the Security Interest (Enforcement) Rules, 2002

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **M/s.** மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 3ன் படி கீழ்க்கண்ட தேதிகளிட்ட **கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன் பெற்றவர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன் பெற்றவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை கீழ்குறிப்பிட்டுள்ள தேதிகளன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கி உள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **M/s. மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-க்கு வந்து சேர வேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

வ.எண்.1: (திண்டிவனம் கிளை) கடன்தாரர்கள்: 1.Mr.மைக்கேல்ராஜ் சங்கர், 2.Mrs.சுப்புலஷ்மி மைக்கேல்ராஜ் மற்றும் **ஜாமீன்தாரர்: 3.Mr.சரத்குமார் மூத்தா;** கடன் கணக்கு எண். **X0RHTHV000001722361;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **24.04.2026;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: **24.04.2026 அன்றுள்ளபடி ₹ 4,69,294.58;** கடன் நிலுவை தொகை: **05.09.2026 அன்றுள்ளபடி ₹ 5,06,712.58** மற்றும் வட்டி.
சுவாதீனம் எடுத்த தேதி: **26.09.2026**
சொத்து விவரம்: திண்டிவனம் பதிவு மாவட்டம், (அவரப்பாக்கம்) சார் பதிவகம் எல்லைக்குட்பட்ட அயன் புஞ்சை SF எண்.104/6, நத்தம் SF எண்.104/2, தற்போதைய SF எண்.104/2A2 (பழைய.SF எண்.259/5) **கொல்லர் கிராமம்** என்னும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட முறையான அடமானதிலுள்ள **1340 சதுர அடி நிலம்.** எல்லைகள்: வடக்கு: குப்பன் நிலம், தெற்கு: பிரியா விற்பனை நிலம், கிழக்கு: லட்சுமண நாராயண ரெட்டியார் நிலம், மேற்கு: தெரு.

வ.எண்.2: (திண்டிவனம் கிளை) கடன்தாரர்கள்: 1.Mr.ஏழுமலை மன்னார், 2.Mrs.நளினி ஏழுமலை மற்றும் **ஜாமீன்தாரர்: 3.Mr.தினகரன் காசி;** கடன் கணக்கு எண். **XNHLTHV000001720284;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **24.04.2026;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: **24.04.2026 அன்றுள்ளபடி ₹ 4,60,333.03;** கடன் நிலுவை தொகை: **05.09.2026 அன்றுள்ளபடி ₹ 4,96,022.03** மற்றும் வட்டி.
சுவாதீனம் எடுத்த தேதி: **26.09.2026**
சொத்து விவரம்: திண்டிவனம் பதிவு மாவட்டம், (அவரப்பாக்கம்) சார் பதிவகம் எல்லைக்குட்பட்ட **புஞ்சை புதிய SF எண்.82/4, பாகம் பிரிக்கப்பட்ட எண்.82/4A, பழைய S.F.எண்.18/13, 18/14, 18/15, 82/5, வடம்பூண்டி கிராமம்** என்னும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட முறையான அடமானதிலுள்ள **2180 சதுர அடி நிலம்.** எல்லைகள்: வடக்கு: புவனேஸ்வரன், சிவகுமார் குடும்ப நிலம், தெற்கு: தெரு, கிழக்கு: அஞ்சலை மனை, மேற்கு: தெரு.

வ.எண்.3: (திருவண்ணாமலை கிளை) கடன்தாரர்கள்: 1.Mr.விநாயகம் P, 2.Mrs.சரண்யா V மற்றும் **ஜாமீன்தாரர்: 3.Mr.மணிகண்டன் A;** கடன் கணக்கு எண். **X0RHPLU000001710611;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **08.05.2026;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: **08.05.2026 அன்றுள்ளபடி ₹ 2,42,544.57;** கடன் நிலுவை தொகை: **05.09.2026 அன்றுள்ளபடி ₹ 2,59,302.57** மற்றும் வட்டி.
சுவாதீனம் எடுத்த தேதி: **27.09.2026**
சொத்து விவரம்: திருவண்ணாமலை பதிவு மாவட்டம், கலசபாக்கம் சார் பதிவாளர் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.63/6 & புதிய சர்வே எண்.63/51, **கதவு எண்.635, கொங்கநல்லூர் கிராமம்** என்னும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட முறையான அடமானத்தில் உள்ள **1754 சதுர அடி மனை.** எல்லைகள்: வடக்கு: தெரு, தெற்கு: ஜெயராமன் நிலம், கிழக்கு: தெரு, மேற்கு: சின்னதுரை நிலம்.

வ.எண்.4: (பண்ருட்டி கிளை) கடன்தாரர்கள்: 1.Mr.S.குமார், 2.Mrs.K.லஷ்மி மற்றும் **ஜாமீன்தாரர்: 3.Mr.வெங்கடேசன் U;** கடன் கணக்கு எண். **XRESPNR00964360;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **24.02.2026;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: **24.02.2026 அன்றுள்ளபடி ₹ 5,00,770.55** மற்றும் வட்டி.
சுவாதீனம் எடுத்த தேதி: **26.09.2026**
சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம், புதுப்பேட்டை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, அயன் புஞ்சை புதிய சர்வே எண்.255/2, அதன் தொடர்புடைய பழைய சர்வே எண்.344, **நத்தம் கிராமம்** என்னும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட முறையான அடமானதிலுள்ள **828 சதுர அடி சொத்து.** எல்லைகள்: கிழக்கு: பிரிவினை மூலம் முருகன்-க்கு சொந்தமான தோட்டம், மேற்கு: S.முருகன்-க்கு சொந்தமான தோட்டம், வடக்கு: குமார்-க்கு சொந்தமான மனை /ரோடு, தெற்கு: ராமலிங்கம்-க்கு சொந்தமான தோட்டம்.

வ.எண்.5: (பண்ருட்டி கிளை) கடன்தாரர்கள்: 1.Mr.ராமன் A, 2.Mrs.அனிதா A; கடன் கணக்கு எண். **X0RHPNR000001714745;** கோரிக்கை அறிவிப்பு தேதி: **24.07.2025;** கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: **24.07.2025 அன்றுள்ளபடி ₹ 3,36,110.11;** கடன் நிலுவை தொகை: **05.09.2026 அன்றுள்ளபடி ₹ 3,97,701.49** மற்றும் வட்டி.
சுவாதீனம் எடுத்த தேதி: **26.09.2026**
சொத்து விவரம்: விருதாச்சலம் பதிவு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, **முடப்புளி கிராமத்தில்** சர்வே எண்.54/4, புதிய SF எண்.54/4C-ல் பதிவு செய்யப்பட்ட முறையான அடமானத்தில் உள்ள **2180 சதுர அடி சொத்து.** எல்லைகள்: வடக்கு: பரமசிவம் மனை, தெற்கு: வழிப்பாதை, கிழக்கு: ராமலிங்கம் மனை, மேற்கு: கேசவன் மனை.

தேதி: 26.09.2026 / 27.09.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
M/s.மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

Karur Vysya Bank
Smart way to bank

சொத்து வசூல் கிளை
புதிய எண்.2/1 மற்றும் 2/2, 1வது தளம், அங்காடி தெரு, வெங்கடேசபுரம் காலனி, அயனாவரம், சென்னை - 600023
e-Mail ID: arbchennai@kvbmail.com Mob: 89398 69789

அசையா சொத்து விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை **கரூர் வைஸ்யா வங்கி, விழுப்புரம் கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன்தொகையான **31.08.2026** அன்றுள்ளபடி **₹ 57,30,077.47** (ரூபாய் ஐம்பத்தேழு லட்சத்து முப்பதாயிரத்து எழுபத்தேழு மற்றும் பைசா நாற்பத்தேழு மட்டும்) மற்றும் **01.09.2026** முதல் வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **28.10.2026** அன்று விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர் & ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: 1. M/s.அனு டிரேடர்ஸ், உரிமையாளர் நிறுவனம், அதன் உரிமையாளர் P.ஆறுமுகம், அலுவலக முகவரி: எண்.9, இளங்கோவடிகள் தெரு, முத்தரையர்பாளையம், பாண்டிச்சேரி-605 009. **உரிமையாளர்: 2.Tvl.P.ஆறுமுகம்,** S/o.பழனி கவுண்டர், எண்.9, இளங்கோவடிகள் தெரு, முத்தரையர்பாளையம், பாண்டிச்சேரி-605009. **ஜாமீன்தாரர்: 3.Tvl.R.கௌதம்,** S/o.ராஜா, எண்.1/63, கிழக்கு பாண்டி ரோடு, கண்டமங்கலம், விழுப்புரம்-605102

அசையா சொத்து விவரம்

விழுப்புரம் பதிவு மாவட்டம், கண்டமங்கலம் சார் மாவட்டம் மற்றும் **சின்னபாபுசமுத்திரம் கிராமம்** எல்லைக்குட்பட்ட மொத்தமுள்ள ஹெக்டேர் 0.28.5 ஏர்ஸ் நிலத்தில் சர்வே எண்கள்.6/3-ல் 0.07.5 ஏர்ஸ், 6/4-ல் ஹெக்டேர் 0.06.5 ஏர்ஸ், 6/14-ல் ஹெக்டேர் 0.27.5 ஏர்ஸ், 6/15-ல் ஹெக்டேர் 0.31.0 ஏர்ஸ், 6/16-ல் ஹெக்டேர் 0.29.0 ஏர்ஸ், 6/17-ல் ஹெக்டேர் 0.02.5 ஏர்ஸ் நிலம் மற்றும் **கண்டமங்கலம் கிராம** எல்லைக்குட்பட்ட மொத்தமுள்ள ஹெக்டேர் 0.21.0 ஏர்ஸ் நிலத்தில் சர்வே எண்.9/1-ல் ஹெக்டேர் 0.02.0 ஏர்ஸ் நிலம். ஆகமொத்தம் **ஹெக்டேர் 1.06.0 ஏர்ஸ் (ஏக்கர் 2.61 சென்டு),** அனைத்து நிலங்களும் மனைகளாக மாற்றப்பட்டு அவை "ஸ்ரீ அம்மன் நகர்" எனபெயரிடப்பட்டுள்ள லேஅவுட்டாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஜட்டம் எண்.1: மனை எண்.1:- 1260 **சதுர அடி,** அளவுகள் கிழக்கு மேற்காக 20 அடி மற்றும் தெற்கு வடக்காக 63 அடி. (சர்வே எண்.6/15-ல் உள்ளது). எல்லைகள்: லேஅவுட் குறுக்கு சாலைக்கு கிழக்கு, மனை எண்.2-க்கு மேற்கு, பழனி நிலத்திற்கு வடக்கு, 20 அடி அகல குறுக்கு சாலைக்கு தெற்கு. மொத்த பரப்பு - 1260 சதுர அடி.

ஜட்டம் எண்.2: மனை எண்.2 to 4:- 3780 **சதுர அடி,** அளவுகள் கிழக்கு மேற்காக 60 அடி மற்றும் தெற்கு வடக்காக 63 அடி. (சர்வே எண்.6/15-ல் உள்ளது). எல்லைகள்: மனை எண்.1-க்கு கிழக்கு, மனை எண்.5-க்கு மேற்கு, பழனி நிலத்திற்கு வடக்கு, 20 அடி அகல குறுக்கு சாலைக்கு தெற்கு. மொத்த பரப்பு - 3780 சதுர அடி.

ஜட்டம் எண்.3: மனை எண்.5:- 1265 **சதுர அடி,** அளவுகள் கிழக்கு மேற்காக 20 அடி மற்றும் தெற்கு வடக்காக மேற்கு திசையில் 63 அடி, கிழக்கு திசையில் 63½ அடி. (சர்வே எண்.6/15-ல் உள்ளது). மனை எண்.6:- 1270 சதுர அடி, அளவுகள் கிழக்கு மேற்காக 20 அடி மற்றும் தெற்கு வடக்காக 63½ அடி. (சர்வே எண்.6/15-ல் உள்ளது). மனை எண்.5 & 6-க்கான எல்லைகள்: லேஅவுட் குறுக்கு சாலை-க்கு தெற்கு, மனை எண்.4-க்கு கிழக்கு, பழனி நிலத்திற்கு வடக்கு, மனை எண்.7-க்கு மேற்கு. மொத்த பரப்பு - 2535 சதுர அடி.

ஜட்டம் எண்.4: மனை எண்.7:- 1270 **சதுர அடி,** அளவுகள் கிழக்கு மேற்காக 20 அடி மற்றும் தெற்கு வடக்காக 63½ அடி. (சர்வே எண்.6/15-ல் உள்ளது). மனை எண்.8:- 1270 சதுர அடி, அளவுகள் கிழக்கு மேற்காக 20 அடி மற்றும் தெற்கு வடக்காக 63½ அடி. (சர்வே எண்.6/15-ல் உள்ளது). மனை எண்.7 & 8-க்கான எல்லைகள்: லேஅவுட் குறுக்கு சாலை-க்கு தெற்கு, பழனி நிலத்திற்கு வடக்கு, மனை எண்.6-க்கு கிழக்கு, மனை எண்.9-க்கு மேற்கு. மொத்த பரப்பு - 2540 சதுர அடி.

ஜட்டம் எண்.5: மனை எண்.9,10,11 **மற்றும் லேஅவுட் கிழக்கு பகுதியின் மீதமுள்ள மனைகள்:-** 4032¼ **சதுர அடி,** அளவுகள் கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 63½ அடி தெற்கு திசையில் 63 அடி. மற்றும் தெற்கு வடக்காக மேற்கு திசையில் 63½ அடி, கிழக்கு திசையில் 64 அடி. (சர்வே எண்.6/15-ல் உள்ளது). எல்லைகள்: லேஅவுட் குறுக்கு சாலை-க்கு தெற்கு, பழனி நிலத்திற்கு வடக்கு, மனை எண்.8-க்கு கிழக்கு, திருநாவுக்கரசு மற்றும் வேதநாயகம் நிலத்திற்கு மேற்கு. மொத்த பரப்பு - 4032 ¼ சதுர அடி.

ஆகமொத்த பரப்பு - 14147 ¼ **சதுர அடி. இந்த மனையில் வீட்டு கட்டிடம், அதனுடன் அனைத்து பொருத்தப்பட்டுள்ளவைகள் மேல்கட்டமைப்புகள், சேவை இணைப்புகள் மற்றும் டெபாசிட், அதனுடன் வழக்கமான வழிப்பாதை மற்றும் அனுபந்த உரிமைகள்.**

Geo Coordinates : 11.919636, 79.675979

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 90,00,000/-	டேவணித்தொகை (EMD)	₹ 9,00,000/-	ஏல உயர்வுத்தொகை	₹1,00,000/-

சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்: 01.10.2026 முதல் 27.10.2026 வரை காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும்.

இ-ஏல விண்ணப்ப படிவங்களை ஆன்லைனில் சமர்பிக்க வேண்டிய கடைசி தேதி & நேரம் 27.10.2026 அன்று மாலை 5.00 மணி வரை

இ-ஏலத் தேதி மற்றும் நேரம்: 28.10.2026 அன்று மாலை 03:00 மணி முதல் 04.00 மணி வரை விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 10 நிமி. காலவரையற்ற நீடிப்புகளுடன் இ-ஏலமானது https://assets.matexauctions.com-என்ற இணையதளத்தின் வாயிலாக நடைபெறும்

Nodal Bank Account Name: The Karur Vysya Bank Ltd., Central Office Bid Collection,
Account Number: 1101351000000973, IFSC Code: KVBL0001101,
EMD for the account of M/s. ANU TRADERS

தொடர்புகொள்ள வேண்டிய நபர் & தொலைபேசி எண்:
உதவி பொது மேலாளர் - 89398 69789 / 99426 06507 e-Mail: arbchennai@kvbmail.com

விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடவும்: www.kvb.co.in/Property Under Auction சொத்தினை ஏலம் விடும் இணையதள முகவரி https://assets.matexauctions.com சேவை வழங்குநர் M/s. Matex Net Pvt. Ltd.

SARFAESI சட்டம், 2002 விதி 9(1)-ன்கீழ் 15 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன் பாக்கியை **28.10.2026** இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து இ-ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன்பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி, இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

தேதி : 28.09.2026
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!